சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை - 08

ந.க.எண் 5840 / அ5 / 2023 நாள் 27.07.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி – சென்னை மாவட்டம் - மார்ச் / ஏப்ரல் 2023 ஆண்டு பொதுத்தேர்வுகள் - மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகித்தல் - சார்பு |
| பார்வை | சென்னை -06 அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 023662/எச்4/2023 நாள் 25.07.2023 |

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி மார்ச்/ ஏப்ரல் 2023 பொதுத்தேர்வெழுதிய மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பள்ளி மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்கள் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மதிப்பெண் சான்றிதழ்களை உறையிடும் பணி முடித்து மாவட்டக்கல்வி அலுவலர்களிடம் ஒப்படைக்கும் நாள் மாவட்டக்கல்வி அலுவலர்கள் பள்ளித்தலைமையாசிரியர்களிடம் ஒப்படைக்கும் நாள் மற்றும் பள்ளித்தலைமையாசிரியர்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கும் நாள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உதவி இயக்குநர் மதிப்பெண் சான்றிதழ்களை உறையிடும் பணியினை முடித்து அதனை மாவட்டக்கல்வி அலுவலர்களிடம் ஒப்படைக்கும் நாள் | | 28.07.2023 |
| மதிப்பெண் சான்றிதழ்களை மாவட்டக் கல்வி அலுவலர்கள் பள்ளித் தலைமையாசிரியர்களிடம் ஒப்படைக்கும் நாள் | | 28.07.2023 |
| பள்ளித் தலைமையாசிரியர்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கும் நாள் | | 31.07.2023 |

மாவட்டக்கல்வி அலுவலர்கள் 28.07.2023 அன்று மதிப்பெண் சான்றிதழ்களை உதவி இயக்குநர் அவர்களிடமிருந்து பெற்று தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுக்கு வழங்குமாறும் , தலைமையாசிரியர்கள் மாணவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்களை 31.07.2023 வழங்க அறிவுறுத்தமாறும் அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து மதிப்பெண் சான்றிதழ்களை 28.07.2023 அன்று பெற்று மாணவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்களை 31.07.2023 அன்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை) சென்னை மாவட்டம்

2.அனைத்து வகைப்பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் சென்னை மாவட்டம்.

நகல

சென்னை -06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது